2002ஆம் ஆண்டின் தமிழ் இலக்கியப் போக்குகள் பற்றி விமர்சிக்கிறார் கவிஞர் இந்திரன்.

“நவீன தமிழ் இலக்கியம் என்பது மாம்பலம் ரங்கநாதன் தெருவை விட ஜனநெரிசல் மிக்கது” என்கிறது ஒரு சிற்றிதழ். 2002-ன் காலண்டரிலிருந்து நாள்கள் உதிர்ந்துபோன நிலையில் இது சரி என்றே தோன்றுகிறது.

இளைய சக்திகள் இந்த ஆண்டு தீவிரமடைந்துள்ளன. தலித் இலக்கிய வாதிகள் இயக்கம்போல், தமிழுக்குப் புத்துயிர் ஊட்டுகிறார்கள். பெண்கள் இணைந்து இயங்கத் தொடங்கி, ஒன்று சேர்ந்து ‘ஊடறு’ எனும் உலகு தழுவிய தொகுதியைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.



# இந்த ஆண்டின் விசேஷ கவனம் கவிதை







இந்திரன்

2002 - ஐ தொகுப்புகளின் ஆண்டு என்றுகூடச் சொல்லலாம். தொடக்கத்தில் சென்னை புத்தகக் கண்காட்சியிலேயே தொகுப்பு வேலை சூடு பிடித்து விட்டது. ஜெயகாந்தன், ஆ. மாதவன், அசோகமித்திரன், கி.ரா, சு.ரா, வண்ணநிலவன், வண்ணதாசன் என்று பல தொகுப்புகள்.

சென்னையில் மாதந் தோறும் ‘காவ்யா’ நடத்தும் கூட்டங்களில் மூத்த எழுத்தாளர்கள் பேசுகிறபோது கூட்டம் கூடுவதைப் பார்த்தால் இளைய தலைமுறைக்கு மூத்த




தலைமுறை மீது அக்கறை கூடி விட்டதோ என்று தோன்றுகிறது. அண்மையில் சுஜாதா, காவ்யா கூட்டத்தைப் பார்த்து வியந்து போனார். ஆனால், முந்தைய ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட 'குறள்பீடம்', இந்த ஆண்டு இருக்கும் இடம் தெரியவில்லை. அரசியல்வாதிகளையும், அரசாங்கத்தையும் நம்பி இலக்கியம் இல்லை என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது.

தனி மனிதர்கள் கைப்பணம் செலவழித்து கொண்டு வரும் சிறுபத்திரிகை இயக்கம், பலப்பட்டிருக்கிறது. எங்கோ காவேரிப் பட்டிணத்தில் உட்கார்ந்து கொண்டு 'புது எழுத்து' ஆசிரியர் மனோன்மணி, உலக இலக்கியங்களின் நவீன போக்குகளை தமிழுக்குக் கொண்டு வருகிறார். ஓவியம், சிற்பம், மக்கள் பண்பாடு என்று 'புனைகளம்' எடுத்துக்கொள்ளும் அழகியல் ரீதியான அக்கறை இன்னும் சிறப்பானது. தலித், கோடாங்கி, வல்லினம் ஆகியவை தலித்தியம், பெண்ணியம் குறித்த சிந்தனைகளுக்கு மேடை அமைத்துக் கொடுக்கின்றன.

'சே குவாரா - வாழ்வும் மரணமும்' புத்தகத்தைத்தான் இந்த ஆண்டின் சிறந்த புத்தகம் என்று நான் சொல்வேன். 2002-ன் அடுத்த சாதனை ஃப்ரான்ஸ் ஃபானன் பிரெஞ்சில் எழுதிய 'The wretehed of the earh' நூலின் வெளியீடு. இந்தப் புத்தகங்களுக்காக விடியல் பதிப்பகத்தைப் பாராட்டியே தீரவேண்டும். மேலும் பாலச்சந்திரன் சுள்ளிக்காடின் 'சிதம்பர நினைவுகள்' கே.வி. ஷைலஜாவின் மொழி பெயர்ப்பில் வந்திருக்கிறது. நேருவின் 'உலக சரித்திரம்' இரண்டு பாகங்களாக, 'அலைகள்' மறுபதிப்பு செய்திருக்கிறது. சந்தியா பதிப்பகம் பஷீர், சக்கரியா, ஆல்பர் காம்யூ... என்று ஏராளமான மொழி பெயர்ப்புகளைக் கொண்டு வந்திருக்கிறது. ஆதிவாசிகளின் கவிதைகளை தமிழில் மொழிபெயர்த்து நான் கொண்டு வந்திருக்கிறேன்.





இந்த ஆண்டு புனைகதைகளுக்கு அவ்வளவு தோதுப்பட்ட ஆண்டு இல்லை. பொதுவாக நாவல்கள் எழுதும் எஸ். ராமகிருஷ்ணன், ஜெயமோகன், எம்.ஜி. சுரேஷ், யூமா. வாஸுகி ஆகியோர் ஏதும் எழுத

வில்லை. ஷோபா சக்தி எழுதிய 'கொரில்லா', அ. முத்துலிங்கத்தின் 'மகாராஜாவின் ரயில் வண்டி', ஐசக் அருமை ராஜனின் 'காரணங்களுக்கு அப்பால்', தஞ்சை ப்ரகாஷின் 'மீனின் சிறகுகள்' லக்ஷ்மி மணிவண்ணனின் 'அப்பாவின் வீட்டில்...' என்று நினைவில் நிழலாடுபவை சிலவைதான். பாமா., சா. கந்தசாமி ஆகியோரின் படைப்புகள் அவர்களின் முந்தைய வெற்றிகளாலேயே தோற்கடிக்கப்படுகின்றன.

தலித் இலக்கியம் என்று எடுத்துக் கொண்டால் விழி.பா. இதயவேந்தனின் 'தலித் அழகியலும், 'தலித் சிறுகதைகள்' தொகுப்பும் ஆய்வுக்கு உதவக் கூடியவை.

மொத்தத்தில் கவிதைதான் இந்த ஆண்டில் விசேஷ கவனம் பெறுகிறது. என்.டி. ராஜ்குமாரின் 'ரத்த சந்தனப் பாவை', குட்டி ரேவதியின் 'முலைகள்', வசந்த் செந்திலின், 'இசைத் தட்டின் மேல் ஒரு முள் விழுந்தது', ஸ்ரீநேசனின் 'காலத்தின் முன் ஒரு செடி' என்று குறைந்தது பத்து கவிதைத் தொகுப்புகளையாவது நாம் குறிப்பிட முடியும். சிறு பத்திரிகைகளில் மாலதி மைத்ரி தனக்கென சிறப்பான இடம் கொண்டிருக்கிறார். சுகிர்த ராணி, வெண்ணிலா, இளம்பிறை, பாலை நிலவன், ராணி திலக், சங்கரராம சுப்பிரமணியன், ஆசு என்று ஒவ்வொருவரும் தங்களது தனியான அடையாளங்களோடு காணப்படுகிறார்கள். நவீன கவிதை குறித்த புதிய எல்லைகளைத் தேடும் இளம் தலைமுறையின் இந்த சுறுசுறுப்பு மகிழ்ச்சியளிக்கக்கூடியது.





மீரா

2002-ம் ஆண்டு தனிப்பட்ட முறையில் தமிழ் இலக்கியத்திடம் குரூரமாக நடந்து கொண்டுவிட்டது. எத்தனையோ எழுத்தாளர்களின் கிரியா ஊக்கியாகச் செயல்பட்ட, கவிஞர் மீராவை தமிழ் இலக்கிய உலகம் இழந்துவிட்டது இந்த ஆண்டின் சோகம்.